(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(14).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 மே 26 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2023 யூன் 06, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், பெயர்குறிக்கப்பட்ட பொதுநலவாய நாடுகளின் பிரகடனம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 பெப்ரவரி 14 ஆம் திகதிய 2319/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/49 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/51 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/52 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/53 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/54 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/55 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/56 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/57 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 10),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 13 ஆம் திகதிய 2262/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 11),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 மற்றும் 127 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 12),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதிய 2298/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 13),— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 மற்றும் 321 ஆம் பிரிவுகளின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6,10,11,13,14,16 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 117 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை மற்றும் கட்டளை இல. 36 இல் குறிப்பீடு செய்யப்பட்டவை அங்கீகரிக்கப்படுவதாக இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 36

2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் 31002 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "களஞ்சிய முற்பணக் கணக்கு—அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களம்" என்பதற்கெதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 223,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 30,000,000 இலிருந்து ரூபா. 38,000,000 வரை. |

(இக்கட்டளை 2022.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரணில் விக்கிரமசிங்க*
நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்

2023.05.16 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2023 யூன் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

836/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த நிதித்தொகை மற்றும் ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நாடுகள் யாவை;

(iv) மேற்படி வாகனங்களை இறக்குமதி செய்துள்ள கம்பனிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

### (2023 யூன் 09, வெள்ளிக்கிழமை)

3268/2023

கௌரவ எம். எஸ். தௌபீக்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வக்பு பிரிவானது முஸ்லிம் பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், ஸாவியாக்கள் மற்றும் தர்காக்கள் உட்பட அறக்கொடை நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் தொடர்பான தரவுத் தளமொன்றைப் பேணிச் செல்லாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறு தரவுத் தளமொன்றை பேணிச் செல்லாமை காரணமாக மேற்படி நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள், தனிப்பட்ட சொத்துக்களாகப் பயன்படுத்துதல் மற்றும் வக்பு சபைக்குத் தெரியாமல் மேற்படி சொத்துக்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல் போன்ற ஊழல்களும் முறைகேடுகளும் இடம்பெறுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி ஊழல்களையும் முறைகேடுகளையும் தடுப்பதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக மேற்குறித்த சொத்துக்கள் தொடர்பில் முறையான தரவுத் தளமொன்றை அமைப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# 2023 யூன் 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1314/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெதுரு ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவினம் மற்றும் இறுதிச் செலவினம் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) தற்போது மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் இந்நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் வலதுகரை கால்வாய் மற்றும் இடதுகரை கால்வாய் என்பவற்றின் ஊடாக திறந்துவிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நீரின் உச்சளவு தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தினை நிறைவு செய்த பின்னர் திட்டமிடப்பட்டவாறு இடதுகரை கால்வாயிலிருந்தும் வலதுகரை கால்வாயிலிருந்தும் நீர் திறந்துவிடப்படுமா என்பதையும்;

(iii) வலதுகரை மற்றும் இடதுகரை என்பவற்றுக்கான கட்டமைப்புகள் முறையான அத்திவாரமோ அல்லது முறையான இணைப்புகளோ இன்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படும் பயன்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக காணிகளைச் சுவீகரிப்பதற்கும் நீரில் மூழ்கும் காணிகளுக்கு இழப்பீடுகளைச் செலுத்துவதற்கும் உறப்பட்ட செலவினம் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1318/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களனி கங்கையை அண்டியதாக அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அக்கைத்தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் கழிவுநீர், அந்த கங்கையுடன் கலப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அந்தக் கழிவுநீர் காரணமாக களனி கங்கையின் நீருக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) கழிவுநீரை களனி கங்கைக்கு வெளிவிடுவதைத் தடுக்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1320/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) எலஹெர – கிரித்தலய சரணாலயத்தின் பரப்பளவு, ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி சரணாலயத்திற்குச் சொந்தமான சுமார் 250 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தில் பாரிய சூழல் அழிவு ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது தொடர்பாக அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1328/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை மேற்படி கிளைகளினால் ரூ.5 மில்லியனுக்கு அதிகமாக கடன் வழங்கப்பட்டுள்ள கம்பனிகள் மற்றும் நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) குறிப்பிட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள கடன் தொகையில் தற்போது அறவிட முடியாதுள்ள கடன் தொகையின் அளவு யாது;

(iv) குறிப்பிட்ட கடன் தொகையினை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்படும் கடன் தொகையில் அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்டுள்ள கடன் தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1460/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள ரின்மீன் உற்பத்தித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலைகளினால் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற மீன் ரின்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) ரின்மீன் கைத்தொழிற்றுறையை மேம்படுத்துவதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) புதிய ரின்மீன் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1505/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது "பாடசாலை சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்" நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், "பாடசாலை சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்" நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) "பாடசாலை சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்" தொடர்பில் அதிக முனைப்புடன் பங்களிப்பை வழங்கும் பாடசாலைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1544/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அதிகமாக பாக்கு பயிரிடப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற கொட்டைப்பாக்கின் அளவு யாதென்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள கொட்டைப்பாக்கின் அளவு மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள அந்நியச் செலாவணியின் அளவு ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) இலங்கையில் பாக்குச் செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1576/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பாதை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) சாதாரண பாதைகள் மற்றும் அதிவேகப் பாதைகளுக்கு இன்றளவில் வழங்கப்பட்டுள்ள பாதை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை வேறொரு தரப்பினருக்கு மாற்றுவதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1617/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டத்திற்கென அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவானது ஹெக்டெயார்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காணிகளுக்காக செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி இழப்பீட்டுக்காக வட்டித் தொகை செலுத்த வேண்டியேற்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) வெல்லவாய பிரதேச செயலகம் ரூ.4,620,420/= வட்டித் தொகையை மேலதிகமாக செலுத்தியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேலதிகமாக செலுத்தப்பட்ட வட்டித் தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1634/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

(ii) அவற்றில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

(iii) புதிதாக பதிவு செய்துகொள்வதற்கு விண்ணப்பித்துள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள் வருடாந்தம் கணக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனவா;

(ii) இன்றேல், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2023 யூன் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1677/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின், திருமுறிகண்டி கிராம மக்களினால் பயன்படுத்தப்பட்ட சுமார் 10 ஏக்கர் பரப்பளவுடைய காணி போர் காலத்துக்கு முன்னர் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் மேற்குறிப்பிட்ட கிராம மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அதற்கு இடையூறு செய்தார்கள் என்பதையும்;

(ii) மேற்படி காணியில் இன்றளவில் வீடுகள், வீட்டு அத்திவாரங்கள், கிணறுகள், மலசலக்கூடங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் போன்றவை காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி காணியை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு அங்கீகாரத்தைக் கோரி ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரினால் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்துமூலமான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் இது வரை அதற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காணியை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1758/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆர்ப்பாட்டக்காரர்கள் காலி முகத்திடல் மைதானத்துக்கு ஏற்படுத்தியுள்ள நட்டம் எவ்வளவு;

(ii) மேற்படி நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iii) ஆமெனில், அதற்காக பின்பற்றப்படும் முறையியல் யாது;

(iv) இது தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1800/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பிரதேச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பிரதேச விற்பனை நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி விற்பனை நிலையங்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்கள் வ/ப லங்கா சதொச நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1811/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “எக்ஸ்பிரஸ் பேர்ள்” கப்பல் விபத்தினால் பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றாடல் பாதிப்பினை மதிப்பீடு செய்தல் மற்றும் இழப்பீடு வழங்குதல் பற்றிய செயன்முறையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2530/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிண்ணியா, மூதூர், வெருகல், தம்பலகாமம் மற்றும் குச்சவெளி ஆகிய ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அரச காணிகளில் குடியிருக்கும் காணி உரித்து உறுதிகளைக் கொண்டிராத குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அரச காணிகளில் குடியிருக்கும், உரித்து உறுதிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2576/2023

கௌரவ டீ. வீரசிங்க,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீடுகளிலும் பயிர்செய்கைகளுக்கும் சேதம் விளைவிக்கின்ற எலிகளை இல்லாதொழிப்பதற்கு நச்சு இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நச்சு இரசாயனங்களின் கலவையைத் தீர்மானிக்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) நச்சு இரசாயனப் பொருட்கள் உடலில் சேர்வதால் இறக்கும் எலிகளை உட்கொள்வதன் மூலம் இலங்கைக்குத் தனித்துவமான விலங்குகளும் இறக்கின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், எலித் தொல்லையை கட்டுப்படுத்த உயிரியல் முறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2623/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பு துறைமுக நகர செயற்திட்டத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2692/2023

கௌரவ கே. பீ. எஸ். குமாரசிறி,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீண்ட தூர சேவைகளில் ஈடுபடும் சொகுசுப் பேருந்துகளிடமிருந்து அறவிடப்படும் வருடாந்த வரித்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) வீதி அனுமதிப்பத்திரங்களுக்காக மேற்படி பேருந்துகளிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) எரிபொருள், டயர்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலைமையின் கீழ் மேற்படி கட்டணங்களை அறவிடுதல் நியாயமானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பேருந்து தொழிற்துறைக்கு வழங்கப்படக்கூடிய சலுகைகள் யாவையென்பதையும்;

(ii) பயணிகளுக்கு சிறந்த போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2844/2023

கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாய உபகரணங்கள் மற்றும் கருவிகளின் திறந்த சந்தைவிலை கடுமையாக அதிகரித்துள்ளது என்பதையும்;

(ii) விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில், விவசாயிகள் பாரிய சிரமத்தை எதிர்நோக்கி உள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) விவசாய உபகரணங்கள் மற்றும் கருவிகளை சலுகை விலையில் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2878/2023

கௌரவ யதாமிணீ குணவர்தன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பெருமளவிலான இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளதோடு, சாதாரணமாக ஒருவர் இலங்கைக்கு அனுப்புகின்ற நிதித் தொகையானது, கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்ததை விட தற்போது அதிகரித்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்வாறு எண்ணிக்கையில் அதிகளவான இலங்கைத் தொழிலாளர்கள் இருக்கின்ற பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இவ்வாறு அதிகூடிய இலங்கை தனிநபர் பணவனுப்பல் சராசரி பெறுமதிகளைக் கொண்டுள்ள பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) அவ்வாறே ஒட்டுமொத்தமாக, அதிகூடிய பணவனுப்பல்களை மேற்கொள்கின்ற பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(v) மேற்படி நாடுகளிலிருந்து அல்லது நகரங்களிலிருந்து பணம் அனுப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கியொன்றில் அல்லது நிதி நிறுவனமொன்றில் வசதிகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 யூன் 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2934/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக அத்தாக்குதல் தொடர்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மேற்படி ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரினதும் பெயர், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் வகித்த பதவி மற்றும் சேவை நிலையம் என்பவை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரினதும் பெயர், சேவை நிலையம் என்பன தனித்தனியே யாவையென்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களுள் சில உத்தியோகத்தர்கள் இலங்கை பொலிஸ் சேவையில் உயர் பதவிகளை வகிப்பதன் காரணமாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கு அல்லது விசாரணை அறிக்கைகளில் மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியம் இருப்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2968/2023

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ தேர்தல்கள் நடைபெற்ற திகதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றி பெற்று தொடர்புடைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர், முகவரி மற்றும் பதவிப் பெயர் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நபர்களுக்கான சம்பளம், கொடுப்பனவுகள், எரிபொருள் மற்றும் பிற வசதிகளுக்காக உறப்பட்ட செலவுகள் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நபர்களுக்காக உறப்பட்ட அத்தகைய செலவினங்களுடன் ஒப்பிடுகையில், கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்காக அவர்களிடமிருந்து கிடைத்துள்ள பங்களிப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3076/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்துவதற்காக இலங்கை புகையிரத திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற புகையிரத எஞ்ஜின்கள், இயக்கு வலுத் தொகுதிகள் மற்றும் புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற புகையிரத பயணத் தடவைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) நாளாந்தம் புகையிரதத்தைப் பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) திணைக்களத்தின் நாளாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கை புகையிரத திணைக்களத்தின் வருடாந்த வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3092/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையினை மறுசீரமைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மறுசீரமைப்பினூடாக இலங்கை மின்சார சபையில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கை மின்சார சபையினால் செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்தக் கடன்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கடன்தொகையை முகாமைத்துவம் செய்வதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3105/2023

கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள ஆசிரிய உதவியாளர் நியமனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நியமனங்கள் எவ்வடிப்படையில் வழங்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட மாகாணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவை வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி ஆசிரிய உதவியாளர்கள் அமர்த்தப்பட்ட மாதாந்த சம்பள அளவுத்திட்டம் யாதென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட ஆசிரிய உதவியாளர்களில் இன்றளவில் இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சி பாடநெறியினை கற்றுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரிய உதவியாளர்களை நிரந்தர ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்களை நிரந்தர ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட திகதியினை இவர்களின் ஆசிரியர் சேவையின் ஆரம்ப நியமனத் திகதியாக கருதுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆசிரிய உதவியாளர் பதவியின் சேவைக்காலம் இவர்களின் ஆசிரியர் சேவைக் காலத்துடன் சேர்க்கப்படுமா என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3169/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களைக் கோருகின்ற வெளிநாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாடும் இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்துள்ள வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக மொழிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மொழிச் சான்றிதழ்கள் மற்றும் தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படாத நாடுகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களை அனுப்புவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை ஊழியர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குத் தேவையான தகைமைகளை துரிதமாக பூர்த்தி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3226/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டின் பின்னர் களுத்துறை மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக மாற்றியமைக்கப்பட்ட மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு பாடசாலையினதும் பெயர், உள்ளடங்கும் கல்வி வலயம், மாணவர்களின் எண்ணிக்கை, தேசிய பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்ட திகதி என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மாகாண பாடசாலையாக காணப்பட்ட காலம் முதல் நீண்ட காலமாக மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் சேவையாற்றி, இடமாற்றம் கோரியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு ஆசிரியரும் சேவையாற்றும் பாடசாலை, சேவைக் காலம் மற்றும் கல்வி வலயம் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி இடமாற்றங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) இதன் காரணமாக ஏற்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்படி இடமாற்றங்களை வழங்கும் போது தொடர்புடைய பாடசாலை, தேசிய பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்ட திகதி முதல் மூன்று வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு இதன் காரணமாக ஏற்படுகின்ற அநீதியைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3227/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அரசாங்க ஊழியர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இன்றளவில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக விண்ணப்பித்துள்ள அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களுள் தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக எதிர்காலத்தில் ஆற்றுப்படுத்த எதிர்பார்த்துள்ள அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தப்படுகின்ற அரசாங்க ஊழியர்களை, குறித்த தொழில்களின் நிமித்தம் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3237/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு தொடக்கம் அமய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சுமார் 500 ஊழியர்கள் இன்றளவில் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தில் பணியாற்றுகின்றனரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறித்த ஊழியர்களுக்கான சேவை நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(ii) இலங்கையில் நடைமுறையிலுள்ள தொழில் சட்டங்கள் மேற்படி ஊழியர்கள் தொடர்பில் மீறப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அரச ஊழியர்கள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைவாக இந்த ஊழியர்களுக்கான சம்பளம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3316/2023

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசி வகைகள் யாவையென்பதையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கையானது ஒவ்வொரு தடுப்பூசி வகைக்கமைவாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி தடுப்பூசி வகைகளை உற்பத்திசெய்த நாடுகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தடுப்பூசிகளை இறக்குமதி செய்த நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்கையில் முறையான பெறுகை நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது மாத்திரைகளுக்காக பயன்படுத்தப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கையானது ஒவ்வொரு தடுப்பூசி வகைக்கமைவாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தடுப்பூசி வகைகள் முழுமையாக பயன்படுத்தப்பட்டனவா என்பதையும்;

(iii) எஞ்சியிருப்பின், அவ் எண்ணிக்கையானது ஒவ்வொரு தடுப்பூசி வகைக்கமைவாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உரிய தடுப்பூசி மாத்திரைகளைப் பெற்றுக்கொண்ட ஆட்களுக்கு சிக்கல்கள் ஏற்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2023 யூன் 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சியிலிருந்தபோது இலங்கை மத்திய வங்கியில் பிணைமுறி மோசடி இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியானது எந்த அமைச்சின் கீழ் இருந்தது என்பதையும்;

(ii) மேற்படி சந்தர்ப்பத்தில் குறித்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரின் பெயர் மற்றும் அமைச்சுச் செயலாளரின் பெயர் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

416/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கைப் பொலிஸ் வசமுள்ள உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் மோப்ப நாய்களின் வகைகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு வகைக்கும் ஏற்ப உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ பொலிஸ் மோப்ப நாய் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் வரை பொலிஸ் உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் படி தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

431/2023

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேராசிரியர், டாக்டர், கலாநிதி, வித்யாகீர்த்தி, வித்யாஜோதி, தேசபந்து, தேசகீர்த்தி, தேசமான்ய, விஷ்வகீர்த்தி மற்றும் தேசசக்தி போன்ற ஒவ்வொரு கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/ பதவிகளை அளிப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ள அரச நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கௌரவ நாமம்/கௌரவ பட்டம்/ பதவி வழங்கப்படும் போது பரிசீலிக்கப்படும் கல்வி மற்றும் இதர தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/ பதவிகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இதர கௌரவ நாமங்கள்/ கௌரவ பட்டங்கள்/பதவிகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவற்றை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகளை வழங்குகின்ற இலங்கையின் தனியார் நிறுவனங்கள்/அமைப்புகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனம்/அமைப்பினால் வழங்கப்படுகின்ற கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள்/அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக அரச செயன்முறையொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி செயன்முறை யாதென்பதையும்;

(v) கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகளை வழங்கிய பின்னர் குறித்த ஆட்கள் தொடர்பாக பின் ஆய்வு மேற்கொள்ளும் செயன்முறையொன்று உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அச் செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

690/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவின் துறைநீலாவணை பிரதேசத்தில் காணப்படுகின்ற கிராமிய வைத்தியசாலை இன்றளவில் பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்காக இரண்டு மருத்துவர்களை நியமிக்க வேண்டியபோதிலும், இன்றளவில் ஒரு வைத்தியர் மட்டுமே நியமிக்கப் பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அந்த மருத்துவருக்கு வேறொரு வைத்தியசாலையிலும் பணிகளை கவனிக்க வேண்டியிருப்பதால், குறித்த பிரதேசத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) ஆரம்ப காலத்தில் இந்த மருத்துவமனையில் நோயாளர் காவு வண்டியொன்று இருந்தபோதிலும் தற்போது நோயாளர் காவு வண்டியொன்று இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைக்காக இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்காததன் காரணம் யாது என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்காமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைக்காக நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்கவும், நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்கவும் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

814/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்குத் தேவையான முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட, மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் முட்டைக்கான தட்டுப்பாடு நிலவுமாயின், அத்தட்டுப்பாடானது அன்றாட மற்றும் மாதாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முட்டை உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அன்றாடம் 1000 இற்கும் மேற்பட்ட, 10,000 இற்கும் மேற்பட்ட மற்றும் 100,000 இற்கும் மேற்பட்ட முட்டைகள் எனும் ஒவ்வொறு தொகுதியின் கீழ் முட்டைகளை உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தொகுதியின் கீழ் நாளொன்றில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முட்டை ஒன்றினை இறக்குமதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றினை நுகர்வோருக்கு வழங்கக் கூடிய விலை எவ்வளவு என்பதையும்;

(iii) முட்டை உள்ளிட்ட சில அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் ஏமாற்று வியாபாரிகளால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

837/2023

கௌரவ பிரேம்நாத் சி.தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் சொந்தமான பாடசாலைகளுக்கு மத்தியில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதும், குடிநீர் வசதி, மலசலகூட வசதி, ஆய்வுகூட, நூலக மற்றும் விளையாட்டு வசதிகளைக் கொண்டிராததுமான பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையினதும் பெயர் மற்றும் முகவரி வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அதற்காக எடுக்கப்படும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

851/2023

கௌரவ காமினி வலேபொட,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம், காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென தற்போதைய அரசாங்கத்தின் பிரதானிகள் தெரிவித்துள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் மத்திய அரசாங்கத்துக்குரிய காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒரு மாகாணத்தில் வசிக்கும் குடியிருப்பாளரொருவர் இன்னுமொரு மாகாணத்திலுள்ள காணியொன்றைக் கொள்வனவு செய்யும்போது பின்பற்ற வேண்டியுள்ள புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் யாவை என்பதையும்;

(iv) அவ்வாறான நிலைமையில் தமது மாகாணத்திலுள்ள காணிகளை வெளிநாட்டவருக்கு அல்லது வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பனை செய்வதற்கோ அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கோ யாதேனுமொரு மாகாண சபைக்கு அதிகாரம் கிடைக்குமா என்பதையும்;

(v) மாகாண சபையொன்றுக்கு அதன் தற்றுணிபின் படி மேற்படி அதிகாரங்களை நிறைவேற்றிக்கொள்ள உரிமை கிடைக்குமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3317/2023

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இருக்கின்ற கறவை மாடு வகைகள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமான கறவை மாடுகள் உள்ளனவா என்பதையும்;

(iii) இலங்கையிலுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி கறவை மாடுகளிடமிருந்து அன்றாடம் பெறப்படும் பால் லீட்டர்களின் அளவு ஒவ்வொரு கறவை மாடு வகையின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) இன்றளவில் சினைப் பருவத்திலுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பால்மா இறக்குமதி செய்வதற்காக பாரிய நிதித்தொகை செலவு செய்யப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இலங்கையில் கறவை மாடுகளையும் பாற்பண்ணையாளர்களையும் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3318/2023

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது அதிகளவில் வாகன விபத்துகள் இடம்பெற்று வருகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கொழும்பு-கண்டி பிரதான வீதியின் இந்திகஹமுல சந்திக்கு அருகாமையில் கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள வாகன விபத்துகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விபத்துகளின் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை என்பன ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வேபொட பகுதியிலிருந்து கொழும்பு– கண்டி பிரதான வீதியை அடைவதற்கான நுழைவு வீதியொன்று இருக்கின்றது என்பதையும்;

(ii) வேபொட வீதியிலிருந்து பிரதான வீதிக்குப் பிரவேசிக்கும் வாகனங்கள் கண்டி அல்லது கொழும்பு ஆகிய திசைகளை நோக்கிப் பயணிக்கின்றன என்பதையும்;

(iii) அவ்விடத்தில் உள்ள பாதசாரிகள் கடவையில் அதிகளவான வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி பாதசாரி கடவையும் நுழைவு வீதியும் ஒரே இடத்தில் அமைந்துள்ளமையே இதற்கான காரணம் என்பதையும்;

(v) பல வருடங்களாக இது தொடர்பில் விழிப்புணர்வூட்டப்பட்ட போதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்குறிப்பிட்ட இடத்தில் இடம்பெறும் வாகன விபத்துகளைத் தவிர்த்து, உயிர்ச் சேதங்களையும் சொத்துக்களுக்கான சேதங்களையும் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3319/2023

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டிற்கான உயர்கல்விக்கான மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட மொத்த ஒதுக்கீட்டில் இருந்து மூலதனச் செலவினத்திற்காகவும் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதிகளின் சதவிகிதத்தினை வெவ்வேறாகவும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டில் இருந்து தற்போது மூலதனச் செலவினத்திற்காகவும் மீண்டெழும் செலவினத்திற்காகவும் விடுவிக்கப்பட்டுள்ள நிதிகளை வெவ்வேறாகவும்;

(iv) 2019 முதல் 2023 வரையான காலப்பகுதியின் போது அரச பல்கலைக்கழகங்களில் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதிகளை வெவ்வேறாகவும்;

(v) 2021 முதல் 2023 வரையான காலப்பகுதிக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம், இலங்கை வாழ்க்கை தொழில் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனம் - கட்டுநாயக்க, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதிகளை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?